செய்தி வெளியீடு எண் :394 நாள்: 14.03.2022

## செய்தி வெளியீடு

**ரூ.23.11 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர், மாணவியருக்கான 4 விடுதிக் கட்டடங்கள் மற்றும் 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்து, 92 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் ரூ.50.09 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டமைப்பு பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (14.03.2022) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 13 கோடியே 77 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 4 விடுதிக் கட்டடங்களையும், 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 9 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு பல்வேறு முனைப்பான திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம்மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரத்தில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

விழுப்புரம் மாவட்டம், தையூரில் 50 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 2 கோடியே 17 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக் கட்டடம்;

இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணத்தில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன் 4 கோடியே 11 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம் மற்றும் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 3 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்;

மதுரை மாவட்டம் – கரடிக்கல், பெருங்காமநல்லூர், தேங்கல்பட்டி, கல்லூத்து, நல்லுத்தேவன்பட்டி மற்றும் வெள்ளைமலைப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம் – மல்லணம்பட்டி மற்றும் பள்ளப்பட்டி, தேனி மாவட்டம் – சுருளிப்பட்டி மற்றும் மார்க்கையன்கோட்டை ஆகிய இடங்களிலுள்ள 10 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நபார்ட் வங்கி நிதி உதவியுடன் 9 கோடியே 34 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் ஆய்வகங்கள், கூடுதல் கழிவறைகள், சுற்றுச்சுவர் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ஆகிய உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மேலும், 92 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நபார்ட் வங்கி நிதி உதவியுடன் 50 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பை சார்ந்த 6881 பயனாளிகளுக்கு 48 கோடியே 3 இலட்சம் ரூபாய் அளவில் சிறுதொழில் மற்றும் வியாபாரம் முனைவதற்கான கடனுதவிகள் வழங்குவதன் அடையாளமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று 3 பயனாளிகளுக்கு கடனுதவிகளை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் மூலம் இயங்கும் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் மறைந்த 15 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு, இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று 3 வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு.செஞ்சி கே.எஸ். மஸ்தான், பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகத் தலைவர் திரு. காஜா முகைதீன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப., தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக தலைவர் திரு கா. காஜா முகைதீன், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் முனைவர் மா.மதிவாணன், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் திரு. சி.காமராஜ், இ.ஆ.ப., தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் இரா.நந்தகோபால், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**